# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, நவெம்பர் மாதம் 16 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 14.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ் வளித்தலும்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச. வ. ஓ. 61/2003*

**அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்குச் சிகிச்சையளிப்பதற் காகவும் புனர்வாழ்வளிப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளை வான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* **:-**

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, அவுடதங் களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ் வளித்தலும்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### *சிகிச்சையளித்தல் நிலையங்கள்*

*சிகிச்சையளித்தல் நிலையங்கள்.*

**2.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சர், (இதனகத்துப் பின்னர் "தேஅஅகச" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் விதப்புரை யின்மேல், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களைக் கவனிப்பதற்காகவும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காகவும் (இதனகத்துப் பின்னர் "சிகிச்சையளித்தல் நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சிகிச்சையளித்தல், புனர்வாழ்வளித்தல் நிலைய மொன்றாகவிருப்பதற்கென ஏதேனும் இடத்தை அல்லது கட்டடத்தைப் பெயர்குறிக்கலாம்.

*தனியார் சிகிச்சையளித்தல் நிலையங்களுக்கு உரிமமளித்தல்.*

**3.** (1) எவரேனுமாள், தனது சொந்தச் சார்பில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் குழுவின் சார்பில், விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்படவேண்டிய

2 –PL 002498 – 1,200 (2007/10)

வளவுகளில் அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களைக் கவனிப் பதற்காகவும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காகவும் தனியார் சிகிச்சையளித்தல் நிலையமொன்றைத் தாபிப்பதற்கான உரிமமொன்றுக்காகத் தேஅஅக சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) (அ) வளவுகளை சிகிச்சையளித்தல் நிலையமொன்றா கப் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக்கும் அத்தகைய ஒருமுறையில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன வென்றும் ;

(ஆ) அத்தகைய நிலையத்தில் கிடைக்கின்ற வசதிகள் சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குப் போதியனவாகவுள்ளனவென்றும் ;

(இ) அத்தகைய நிலையங்களில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள பணியாட்டொகுதியினர், இச்சட்டத்தின் கீழ் அவர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தகுதிவாய்ந்தவர்களென்பதை உறுதிப்படுத்துவதற் காக விதித்துரைக்கப்பட்ட தகைமைகளை உடைய வர்களாகவுள்ளனரென்றும் ; அத்துடன்

(ஈ) நிலையத்தின் முகாமைக்காக முன்மொழியப்பட்ட ஒழுங்குகள் திருப்திகரமானவையாகவுள்ளன வென்றும்,

தேஅஅகச திருப்திப்படின், அவசியமென அது கருதுகின்ற எவை யேனும் நிபந்தனைகள், வரையறைகள் அல்லது மட்டுப்பாடுகள் என்பவற்றுக்கமைய, அது விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை அளிக்கலாம். அத்தகைய நிபந்தனைகள், வரையறைகள் அல்லது மட்டுப்பாடுகள் உரிமத்தில் எடுத்துக்கூறப்படுதல் வேண்டும்.

*சிகிச்சையளித்தல் நிலையங்களின் பணிப்பாளர்.*

**4.** (1) அமைச்சர், தேஅஅக சபையின் விதப்புரையின்மேல், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சிகிச்சையளித்தல் நிலையங்களின் பணிப்பாளராக இருப்பதற்கென ஆளொருவரை, இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியினால் பணிப்பாளருக்குக் குறித்தளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் அவர் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நியமித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர் அல்லது அவரது சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், நியாயமான எல்லா நேரங்களிலும், இச்சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்படும் அல்லது உரிமமளிக்கப்படும் ஏதேனும் சிசிக்சையளித்தல் நிலையத்தினுட் பிரவேசித்து, அந்நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதுகின்றவாறாக அது பற்றிய அத்தகைய பரிசோதனைகளைச் செய்யலாம். அத்தகைய நோக்கத்துக்கு அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய உதவியாளர்களை அவர் தம்முடன் கொண்டுவரலாம்.

(3) பணிப்பாளர், தேஅஅக சபைக்குக் காலாகால அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவை அத்தகைய நிலையங்களில் சிகிச்சைளிக்கப்படும் ஆட்களின் எண்ணிக்கை தொடர்பாகச் சிகிச்சையளித்தல் நிலையங்களின் பணிபற்றியும், அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்கு சிகிச்சையும் புனர்வாழ்வு வசதிகளும் வழங்குவதில் அத்தகைய நிலையங்களின் பயனுடைமை பற்றியுமான தகவலைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

*தேஅஅகச பணிப்புகளை விடுத்தல்.*

**5.** தேஅஅகச ஆனது, சிகிச்சையளித்தல் நிலையங்களின் திறமையான முகாமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளைக் காலத்துக்குக்காலம் விடுக்கலாம். அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய நிலையங்களின் கடமையாதல் வேண்டும்.

*சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் முதலியவர்களின் சேவைகளைப் பயன்படுத்துதல்.*

**6.** இச்சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்படும் அல்லது உரிமமளிக்கப்படும் சிகிச்சையளித்தல் நிலையங்களில் அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்குச் சிகிச்சையளிப்பதிலும் அவர்களைக் கவனிப்பதிலும் உதவியளிப்பதற்கென, விடயத்துக்கேற்ப சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது வேறு இயைபான அதிகாரியின் அங்கீகாரத்துக்கமைய, எவரேனும் மருத்துவ அலுவலரின் அல்லது சுகாதாரத் திணைக்களத்தின் அல்லது ஏதேனும் பல்கலைக்கழகத்தின் வேறெவரேனும் அலுவலரின் அல்லது ஊழியரின் அல்லது எவரேனும் மருத்துவத் தொழிலரின் அல்லது இதையொத்த சேவையில் ஈடுபட்டுள்ள வேறெவரேனும் தகுதிவாய்ந்த ஆளின் சேவைகள் பயன்படுத்தப்படலாம். அத்தகைய உதவியானது எந்த நியதிநிபந்தனைகளின் மீது அளிக்கப்படுதல் வேண்டுமோ அந்த நியதிநிபந்தனைகளைக் குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

*மதிப்பீட்டுக் குழாங்களை நியமித்தல்.*

**7.** (1) அமைச்சரானவர், சட்டத்துறையில் திறமை அல்லது அனுபவம்பெற்றுள்ள ஆட்களிடையேயிருந்து அல்லது அவுடதங் களில் தங்கியிருத்தல் சம்பந்தமான உடலியல்சார்துறை அல்லது சமூகப் பிரச்சினைகளில் அனுபவம் அல்லது அறிவுபெற்றுள்ள ஆட்களிடையேயிருந்து பத்துக்கு மேற்படாத ஆட்களைக்கொண்ட மதிப்பீட்டுக் குழாங்களை நியமித்தல் வேண்டும்.

(2) மூன்று பேருக்கு மேற்படாத ஆட்களைக் கொண்டுள்ள மதிப்பீட்டுக் குழாங்கள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்படும் அல்லது உரிமமளிக்கப்படும் சிகிச்சையளிக்கும் நிலையங் களில், இச்சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப் படுவதற்கு நாடுகின்ற ஆட்களை மதிப்பீடு செய்தல் ; அல்லது

(ஆ) அவுடதங்களில் தங்கியிருக்கின்றமைக்காகத் தற்போது சிகிச்சைக்குட்பட்டிருக்கின்ற ஆட்களை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்காலப் புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பிடுதல்,

என்பன அவசியமாக வருகின்றபோதெல்லாம், தேஅஅக சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) மதிப்பீட்டுக் குழாங்களின் தத்துவங்களும் பணிகளும் ஒழுங்குவிதியினால் குறித்துரைக்கப்படுகின்றவாறாக இருத்தல் வேண்டும்.

*அலுவலக முறையாக விஜயம் செய்பவர்களை நியமித்தல்.*

**8.** (1) அமைச்சரானவர், தேஅஅக சபையின் விதப்புரையின் மேல், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பெயர்குறிக்கப்படும் அல்லது உரிமமளிக்கப்படும் ஏதேனும் சிகிச்சையளித்தல் நிலையத்துக்கு அலுவலக முறையாக விஜயம் செய்பவர்களாக இருப்பதற்கென ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியான வர்களும் தகுந்தவர்களுமான ஆட்களைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(2) அவ்வாறு நியமிக்கப்படும் விஜயம் செய்பவர் ஒவ்வொரு வரும், முன்னரே பதவியை வகிக்காதொழிந்தால் ஒழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதி ஒன்றுக்கு அத்தகைய பதவியில் சேவையாற்ற வேண்டும். அத்தகைய ஒவ்வொரு விஜயம் செய்பவரும், எல்லா நேரங்களிலும் அத்தகைய ஏதேனும் சிகிச்சையளித்தல் நிலையத்தினுட் பிரவேசித்து, அவசியமென அவருக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளை அல்லது பரிசோதனைகளை அதன்கண் செய்யலாம். அத்தகைய சிகிச்சையளித்தல் நிலையங்களுக்குக் காலத்துக்குக்காலம் சென்று, இது தொடர்பாக வழங் கப்படக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டுநெறிகளுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கத் தேஅஅக சபைக்குக் காலாகால அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் அத்தகைய விஜயம் செய்பவர்களின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் II

### சிகிச்சையளித்தல் நிலையமொன்றுக்குத் தன்னிச்சையாக அனுமதிக்கப்படுதல்

*தன்னிச்சையான அனுமதிப்புகள்.*

**9.** (1) அவுடதங்களில் தங்கியிருக்கின்றமைக்காகத் தன்னிச்சை யாகச் சிகிச்சையை நாடுகின்ற ஆளொருவர், சிகிச்சையளித்தல் நிலையமொன்றுக்கு அனுமதிக்கப்படுவதற்காக விண்ணப்பிக்க லாம். பராயமடையாத ஒருவரின் விடயத்தில், பெற்றோர் அல்லது பாதுகாவலர், பராயமடையாதவரின் சார்பில் அனுமதிப்புக்காக விண்ணப்பிக்கலாம். சிகிச்சையளித்தல் நிலையமொன்றுக்கு அத்தகையவோர் ஆளை அனுமதித்தலானது, ஒரு மதிப்பீட்டுக் குழாத்தினால் மதிப்பீடு செய்வதற்கமைய, தனித்தனியான அடிப்படையில் முடிபுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய ஆள் அனுமதிக்கப்படுவதன்மேல், அவர் தாம் உட்பட்டிருந்த சிகிச்சைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளாராதலால் அவரைச் சிகிச்சையளித்தல் நிலையத் திலிருந்து அனுப்பிவிடலாமென அந்தச் சிகிச்சையளித்தல் நிலையத்தின் மதிப்பீட்டுக் குழாமும் அதற்குப் பொறுப்பாகவுள்ள மருத்துவ அலுவலரும் அபிப்பிராயப்படும்வரை, அந்தச் சிகிச்சை யளித்தல் நிலையத்தில் வசிப்பவராகத் தொடர்ந்திருக்கலாம். சிகிச்சையளித்தல் நிலையத்திலிருந்து அனுப்பிவிடப்படுவதற் கான நிபந்தனைகள் ஒவ்வொரு சிகிச்சையளித்தல் நிலையத் தினதும் விதிகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### *சிகிச்சையளித்தல் நிலையமொன்றுக்கு வலுக்கட்டாயமாக அனுமதிக்கப்படுதல்*

*சிகிச்சையளித்தல் நிலையமொன்றுக்கு வலுக்கட்டாயமாக அனுமதிக்கப்படுதல்.*

**10.** (1) எவரேனுமாள் அபாயகரமான அவுடதங்களை வழக்கமாகப் பயன்படுத்துகின்றாரெனவும், ஆதலால் அவுடதங்களில் தங்கியுள்ள ஆளொருவராக வந்துள்ளாரெனவும் ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் தகவல் பெறுமிடத்து, அவர், உடனடியாக, அத்தகைய ஆள் அரசாங்க மருத்துவ அலுவலரொருவரால் பரிசோதனை செய்யப்படுவதனைச் செய்விப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிகளை எடுத்தல் வேண்டும். அரசாங்க மருத்துவ அலுவலர், அதன்மேல், அத்தகைய பரிசோதனையின் பெறுபேறுகளை எடுத்துக்கூறி அவுடதங்களில் தங்கியுள்ள ஆளை, அவரிடம் ஆற்றுப்படுத்திய பொலிசு அலுவலருக்கு அல்லது இயைபான பொலிசு நிலையத்தினைச் சேர்ந்த வேறெவரேனும் அலுவலருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையானது, அத்தகைய ஆள் அவுடதங்களில் தங்கியுள்ள ஆளொருவராகவுள்ளாரென்பதற்கான அல்லது அல்லர் என்பதற்கான அவரது அவதானிப்புகளுக்கான காரணங்களையும் அத்தகைய ஆள் எந்த அளவுக்கு அவுடதங்களில் தங்கியுள்ளாரென்பது பற்றிய விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அறிக்கையானது, பொறுப்பாகவுள்ள அலுவலரல்லாத அலுவலரொருவருக்குச் சமர்ப்பிக்கப்படுமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர், அத்தகைய தகவல் பற்றிய நிகழ்வைப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) அரசாங்க மருத்துவ அலுவலரின் அறிக்கையின்படி அவரினாற் பரிசோதனை செய்யப்பட்ட ஆள், அவுடதங்களில் தங்கியுள்ள ஆளொருவராகவிருப்பின், பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், அத்தகைய ஆளை நீதிவானொருவர் முன்னர் கொணர்தல் அல்லது அத்தகைய ஆள் கொணர்தலைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அவர், இப்பிரிவின் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறை பூர்த்திசெய்யப்படுவதன்மேல் ஆளொருவர் எந்த நீதவான் முன்னர் கொணரப்படுகின்றாரோ அந்த நீதவான், அத்தகைய நீதவானினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, இச்சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்படும் அல்லது உரிமமளிக்கப்படும் ஏதேனும் சிகிச்சையளித்தல் நிலையத்துக்கு அத்தகைய ஆள் வலுக்கட்டாய மாகச் சிகிச்சையளித்தலுக்காகவும் புனர்வாழ்வளித்தலுக்காகவும் அனுப்பப்படவேண்டுமெனக் கட்டளை ஆக்குதல் வேண்டும்.

(4) (214 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதே னும் தவறுக்காக ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுமிடத்தும் அத்தகைய ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றம் அத்தகைய ஆள், அவுடதங்களில் தங்கியுள்ள ஆளொருவரென அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் சத்தியத்தின்மீது அளிக்கப்படும் சான்றின்மூலம் திருப்திப்படு மிடத்தும், அந்நீதிமன்றமானது, அத்தகைய ஆள் எந்த அளவுக் குத் தங்கியிருக்கின்றாரென்பதைக் கவனத்துட்கொண்டு, நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் ஆளைச் சிகிச்சையளித்தல் நிலையமொன்றுக்குப் பாரப்படுத்தலாம். அத்தகைய காலப்பகுதி, அத்தகைய ஆள் எந்தச் சிகிச்சையளித்தல் நிலையத்துக்குப் பாரப்படுத்தப்படுகின்றாரோ அந்தச் சிகிச்சை யளித்தல் நிலையத்தின் பணிப்பாளரினாற் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல் நீடிக்கப்படலாம். நீடிப்பானது எந்தச் சூழ்நிலைகளின்மீது வேண்டப்படுகின்றதோ அந்தச் சூழ்நிலை கள், நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் அத்தகைய நீடிப்பை அவசியமாக்குவதற்குப் போதியனவாகவிருத்தல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும் நீதிமன்றமானது விதிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பின் ஒரு பாகமாக சிகிச்சையளித்தற் காலத்தைக் கவனத்திற்கெடுக்கலாம்.

(5) ஆளொருவர் (4) ஆம் உட்பிரிவின்கீழ் சிகிச்சையளிக்கப் படுவதற்காகப் பாரப்படுத்தப்படுமிடத்து, மறியற்சாலைகள் ஆணையாளர், சிகிச்சையளித்தல் நிலையத்தின் பணிப்பாளருட னான கலந்தாலோசனையின் பின்னர், நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சிகிச்சைக்குட்படுத்தப்படுவதற்கென அத்தகைய ஆளை மறியற் சாலையிருந்து அந்நிலையத்திற்கு இடமாற்றுவதற்கு அவசியமான வாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் சிகிச்சையளித்தல் நிலையமொன்றிற்கு அனுமதிக்கப்படும் எவரேனுமாள், காலத்துக்குக்காலம், 7 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு மதிப்பீட்டுக்குழாத்தினால் மதிப்பீடுசெய்யப்படுவதற்கு அமைந்தவராதல் வேண்டும்.

*ஆட்களை நிலையங் களிலிருந்து விடுவித்தல்.*

**11.** (1) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஒரு சிகிச்சையளித்தல் நிலையத்துக்கு அனுமதிக்கப்படும் எவரேனும் ஆள் மதிப்பீட்டுக் குழாத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் சிகிச்சையளித்தல் நிலையத்தின் பணிப்பாளரினது விதப்புரையின்மேலும், தேஅஅக சபையினால் விதிக்கப்படக் கூடிய எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கமையவும் அத்தகைய நிலையங்களிலிருந்து விடுவிக்கப்படலாம்.

(2) நீதிமன்றமானது, நீதிமன்றக் கட்டளையொன்றின் பயனைக் கொண்டு சிகிச்சையளித்தல் நிலையமொன்றில் தடுத்துவைக்கப் படும் ஆளொருவரின் விடயத்தில், அவுடதங்களில் தங்கியுள்ள ஆளொருவர் எந்தச் சிகிச்சையளித்தல் நிலையத்துக்குப் பாரப் படுத்தப்பட்டுள்ளாரோ, அச்சிகிச்சையளித்தல் நிலையத்தின் மதிப்பீட்டுக் குழாத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் அந்தச் சிகிச்சையளித்தல் நிலையத்தின் பணிப்பாளரினது விதப்புரை, நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுவதன்மேல் அத்த கைய ஆளை விடுவிக்கப்படுவதற்கான கட்டளையை ஆக்கலாம். நீதிமன்றக்கட்டளையானது, அவசியமானவிடத்து, நீதிமன்றம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக் கமைந்ததாகவிருக்கலாம்.

## பாகம் IV

## பொது

*சிகிச்சையளித்தல் நிலையங்களை மூடிவிடுதல்.*

**12.** அமைச்சரானவர், தேஅஅக சபையின் மதியுரையின்மீது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பெயர்குறிக்கப்படும் அல்லது உரிமமளிக் கப்படும் ஏதேனும் சிகிச்சையளித்தல் நிலையம் துர்முகாமை செய்யப்படுகின்றது அல்லது சட்டத்தினால் அல்லது அதன்கீழ் விடுக்கப்படும் ஏதேனும் பணிப்பினால் விதிக்கப்படும் ஏதேனும் தேவைப்பாட்டை மீறியுள்ளது எனத் தோன்றினால், அத்தகைய நிலையத்தை மூடிவிடலாம்.

**13.** (1) இச்சட்டத்தின்கீழ் செய்யப்படவேண்டிய ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது பாரப்படுத்துகையை ஆதாரப்படுத்துகின்ற அல்லது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்படும் வேறேதேனும் நோக்கத்துக்காக மருத்துவச் சான்றிதழொன்றைக் கையொப்பமிடுகின்ற மருத்துவத் தொழிலர் ஒருவர், சான்றிதழானது எவ்வாள் தொடர்பானதோ அவ்வாள் அவுடதங்களில் தங்கியுள்ள ஆளொருவராகவுள்ளாரென்ற அபிப்பிராயத்தை அவர் எந்த நிகழ்வுகளின்மீது கொண்டுள்ளாரோ, அந்த நிகழ்வுகளை அதன்கண் குறித்துரைத்தல் வேண்டும். ஏனையோரினால் அவருக்கு அறிவிக்கப்படும் நிகழ்வுகள் மற்றும் அவரினால் காணப்படுகின்றவாறான சூழ்நிலைகளை அவர் விபரமாக எடுத்துக்கூறுதலும் வேண்டும்.

*மருத்துவத் தொழிலர், அபிப்பிராயத்தின் அடிப்படையைக் குறித்துரைத்தல் வேண்டும்.*

(2) ஏனையோரினால் அறிவிக்கப்பட்ட நிகழ்வுகளின்மீது மட்டுமே தாபிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் சான்றிதழொன்றின் மேல், இச்சட்டத்தின்கீழ் நீதிவானொருவரினால் கட்டளையெதுவும் ஆக்கப்படலாகாது.

**14.** அதிகாரமில்லாமல் அபாயகரமான அவுடதமொன்றை அல்லது ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பொருளை ஏதேனும் சிகிச்சையளித்தல் நிலையத்தினுட் கொண்டுவருகின்ற அல்லது கொண்டுவருவதற்கு எத்தனிக்கின்ற அல்லது சிகிச்சையளித்தல் நிலையமொன்றிலுள்ள எவரேனுமாளுக்கு வழங்குகின்ற அல்லது வழங்குவதற்கு எத்தனிக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*அவுடதங்கள் முதலியவற்றை வழங்குதல்.*

**15.** எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் தனது கடமைகளைப் புரிகையில் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவருக்குக் கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் எவையேனும் விதப்புரைகளை அல்லது ஏதேனும் கட்டளையை நிறைவேற்றுகையில் அவரினாற் செய்யப்படும் அல்லது செய்யாது விடப்படும் எதற்கும் அவருக்கெதிராக வழக்கெதுவும் அமைதலாகாது.

*நட்டோத்தரவாதம்.*

**16.** (1) ஆளெவரும் தலைமைதாங்கும் நீதிபதியின் அனுமதியுடனன்றி, இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையொன்றை வெளியிடுதலாகாது.

(2) சிகிச்சையளித்தல் நிலையமொன்றின் கட்டுக்காப்பிலுள்ள அவுடதங்களில் தங்கியுள்ள ஆளொருவர் பற்றிய எல்லாப் பதிவேடுகளும் அந்தரங்கமானவையாகவிருத்தல் வேண்டுமென்

*வழக்கு நடவடிக்கைகள் அனுமதியின்றி வெளியிடப் படலாகாது அத்துடன் பதிவேடுகளின் அந்தரங்கத் தன்மை.*

பதுடன், நீதிமன்றக் கட்டளையொன்றின்மீது தவிர அல்லது நிலையத்தினுள் பாரதூரமானவொரு தவறு புரியப்படுகின்றமை தொடர்பிலான புலனாய்வொன்று சம்பந்தமாகத் தவிர, அளிக்கப் படுதலுமாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாட்டை மீறுகின்ற எவரேனு மாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*சிகிச்சைக் குட்பட்டுள்ள ஆட்களை அடித்தல்.*

**17.** நியாயமான காரணமின்றி, சிகிச்சையளித்தல் நிலைய மொன்றில் சிகிச்சை பெறுகின்ற எவரேனுமாளை அடிக்கின்ற, காயப்படுத்துகின்ற, கொடூரமாக நடாத்துகின்ற அல்லது வேண்டு மென்று அசட்டை செய்கின்ற, அதன்கண் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*ஊழியர்களுக்கு முட்டுக்கட்டையிடுதல் தவறொன்றாதல்.*

**18.** சிகிச்சையளித்தல் நிலையமொன்றில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தனது கடமைகளைப் புரிகையில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது முட்டுக் கட்டையிடுவதற்கு எத்தனிக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*தப்பியோடும் ஆட்களைப் பிடித்தல்.*

**19.** (1) இச்சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்படும் அல்லது உரிமமளிக்கப்படும் சிகிச்சையளித்தல் நிலையமொன்றில் சிகிச்சை பெறுகின்ற எவரேனுமாள் அந்நிலையத்திலிருந்து தப்பியோடுமிடத்து, அவர், எவரேனும் பொலிசு அலுவலரினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் அலுவலரினால் பிடிக்கப்பட்டு சிகிச்சையளித்தல் நிலையத்தில் ஒப்படைக்கப்படலாம்.

(2) சிகிச்சையளித்தல் நிலையமொன்றில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள எவரேனுமாள் அந்நிலையத்தில் தடுத்துவைத்திருக் கப்படும் ஆட்களிடையே ஒழுங்கையும் ஒழுக்காறையும் பேணிக் காப்பது அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக அவரினால் விடுக்கப்படும் எவையேனும் சட்ட முறையான பணிப்புகளுக்குக் கீழ்ப்படிதலை வலுக்கட்டாயப் படுத்துவதற்கு நியாயமாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அளவினதான வலோத்காரம் உட்பட்ட அத்தகைய எல்லா வழிவகைகளையும் பயன்படுத்துவது அத்தகைய ஆளுக்குச் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

**20.** இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ், 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ், 17 ஆம் பிரிவின்கீழ் மற்றும் 18 ஆம் பிரிவின்கீழ் அடங்குகின்ற தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள், நீதிவானொருவரினாலான விளக்கத்தின் பின்னர் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்தினால் அல்லது பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். தண்டம்.

**21.** (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றி அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்படும் தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் -

(அ) இச்சட்டத்தின்கீழ் உரிமங்களை வழங்குவதற்கான நடவடிக்கைமுறையை எடுத்துக்கூறுகின்ற ;

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி உரிமமளிக்கப்படும் அல்லது பெயர்குறிக்கப்படும் சகிச்சையளித்தல் நிலையங்கள் எத்தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுக வேண்டுமோ அத்தேவைப்பாடுகளை எடுத்துக் கூறுகின்ற ;

(இ) அத்தகைய சிகிச்சை நிலையங்களில் பேணப்பட வேண்டிய பதிவேடுகளை எடுத்துக்கூறுகின்ற ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயன்கொடுப்பதற்குத் தேவையான வேறேதேனும் கருமத்தை எடுத்துக்கூறுகின்ற,

ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக் கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**23.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலொழிய -

"அபாயகரமான அவுடதம்" என்பது, (218 ஆம் அத்தியாய மான) நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் அடங்குகின்ற அல்லது அதற்காக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் அவுடதம் என்று பொருளாகும் ;

"அவுடதங்களில் தங்கியுள்ள ஆள்" என்பது, இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர் என்று பொருளாகும்;

"தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை" (தேஅஅகச) என்பது, 1984 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப் பாட்டுச் சபைச் சட்டம் என்று பொருளாகும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*